**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2022**
**D061 இலக்கியத் திறனாய்வு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. திறனாய்வு என்ற சொல்லை வழக்கில் கொண்டுவந்தவர் யார்?
2. வாழ்க்கை எதன் பாடுபொருளாக அமையும்?
3. திறனாய்வின் களமாகவும் இலக்காகவும் இருப்பது எது?
4. சமூகவியல் பற்றிய தெளிவு யாருக்குரியது?
5. இலக்கியக் கலையின் அரசி எனப்போற்றப்படுவது எது?
6. திறனாய்வின் பணி யாது?
7. திறனாய்வாளரின் இரு கண்களாகப் போற்றப்படுபவை எவை?
8. அறநெறி அணுமுறை என்றால் என்ன?
9. சிலம்பின் சிறப்பு யாது?
10. தமிழில் அதிக உரைகண்ட இலக்கண நூல் எது?
11. முல்லைப்பாட்டு ஆராய்ச்சி என்ற நூலின் ஆசிரியர் யார்?
12. சைவத்திருமுறைகளைத் தொகுத்தவர் யார்?
13. 'கட்டவிழ்ப்பு' என்பது எதன் புதிய கோணமாகும்?
14. கோபல்ல கிராமம் – நாவலின் ஆசிரியர் யார்?
15. தலித் என்பது எம்மொழிச் சொல்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. இலக்கியத் திறனாய்வு என்றால் என்ன? அதன் ஆங்கிலப் பதம் யாது?
2. சொல்வளம் என்பது எதைக் குறிக்கும்?
3. திறனாய்வு எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. இலக்கியத் திறனாய்வின் பகுப்பு முறைகள் எவை?
5. விருத்தியுரையில் இடம் பெற வேண்டுவன எவை?
6. ந.மு. வேங்கடசாமி நாட்டார் உரை எழுதிய நூல்களைக் குறிப்பிடுக.
7. நவீனத்துவத்தின் வெளிப்பாடுகள் எவை?
8. தலித் எழுச்சிக்கு வித்திட்டவர் யாவர்?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) இலக்கியமும் வாழ்க்கையும் குறித்துக் கட்டுரை வரைக.

   (அல்லது)

   (ஆ) கலை கலைக்காகவே என்பதனை நிறுவுக.

2. (அ) அழகியல் அணுகுமுறைத் திறனாய்வு குறித்து விவரி.

   (அல்லது)

   (ஆ) செவ்விலக்கியங்களும் திறனாய்வும் குறித்துக் கட்டுரை வரைக.

3. (அ) மார்க்சியத் திறனாய்வாளர்களின் பங்கினை விவரி.

   (அல்லது)

   (ஆ) பெண்ணியத் திறனாய்வு குறித்துக் கட்டுரைக்க.

❋ ❋ ❋